மதிப்பிடப்பட்ட செலுத்த வேண்டிய
வருமானக் கூற்றைச் சமர்ப்பித்தல் மற்றும்
வரித் தவணையைச் செலுத்துதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்
வரிமதிப்பாண்டு *2018/2019*

IRD

ශ්‍රීලංකා දේශීය ආදායම්
இலங்கை உள்நாட்டு இறைவரி
Sri Lanka Inland Revenue

IRD

ශ්‍රීලංකා දේශීය ආදායම්
இலங்கை உள்நாட்டு இறைவரி
Sri Lanka Inland Revenue

Asmt_IT_015_T

மதிப்பிடப்பட்ட செலுத்த வேண்டிய வருமானக் கூற்றைச் சமர்ப்பித்தல் மற்றும் வரித் தவணையைச் செலுத்துதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் வரிமதிப்பாண்டு 2018/2019

இந்த அறிவுறுத்தல் தொகுதி 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய மதிப்பிடப்பட்ட செலுத்த வேண்டிய வருமான வரிக் கூற்றைப் பூர்த்தி செய்வதை இலகுபடுத்துவதற்காக வெளியிடப்படுகின்றது.

மதிப்பிடப்பட்ட செலுத்த வேண்டிய வருமான கூற்றைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர், இந்த அறிவுறுத்தல் தொகுதியை வாசித்து, அதில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் தொடர்பில் அறிந்து கொள்வது மிகவும் பயனுள்ளதாக அமையும்.

இவ் அறிவுறுத்தல் படிவம் **பொது அறிவுறுத்தல்கள், மதிப்பிடப்பட்ட செலுத்த வேண்டிய வருமான வரிக் கூற்றை நிரப்புவதற்கான அறிவுறுத்தல்கள், வருமான வரித் தவணைக் கொடுப்பனவைக் கணிப்பதற்கான அறிவுறுத்தல்கள்** என மூன்று பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

மதிப்பிடப்பட்ட வருமானக் கூற்றைப் பூர்த்தி செய்வதில் ஏதேனும் பிரச்சினைகள் இருப்பின், பின்வரும் தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பை ஏற்படுத்தி விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

1. 1944 - உள்நாட்டு இறைவரி அழைப்பு நிலையம்
2. 011-2134200 - சிரேஷ்ட ஆணையாளர் - வரி ஆலோசனை மற்றும் வாடிக்கையாளர் ஊக்குவிப்பு
3. 011-2134250 - ஆணையாளர் - வியாபார ஆலோசனைப் பிரிவு
4. 011-2134251 - ஆணையாளர் - வரி உதவி மற்றும் அபிவிருத்திப் பிரிவு
5. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் அனைத்து நகர மற்றும் பிராந்திய அலுவலகங்களிலும்

1. பொது அறிவுறுத்தல்கள்

2018.04.01 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 90, 91, 92 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு இணங்க ஆணையாளர் நாயகத்தினால் குறித்துரைக்கப்படும் மாதிரிப் படிவத்திற்கு இணங்க வருமான வரி விதியாகும் எந்தவொரு ஆளும் ஏதேனும் வரிமதிப்பாண்டு ஒன்றுக்காகச் செலுத்த வேண்டிய வருமான வரி தொடர்பில் மதிப்பிடப்பட்ட கூற்று ஒன்றை அவ் வரிமதிப்பாண்டில் ஆகஸ்ட் 15 ஆந் திகதிக்கு முன்னர் ஆணையாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும். அந்த மதிப்பிடப்பட்ட வரித் தொகையை நான்கு தவணைகளில் ஆணையாளர் நாயகத்திற்குச் செலுத்துதல் வேண்டும்.

1.1 வரியின் தவணைக் கொடுப்பனவுகளைச் செலுத்த வேண்டிய இறுதித் திகதிகள் பின்வருமாறு.

தவணை		திகதி
முதலாம் தவணை	-	2018 ஆகஸ்ட் 15
இரண்டாம் தவணை	-	2018 நவம்பர் 15
மூன்றாம் தவணை	-	2019 பெப்ரவரி 15
நான்காம் தவணை	-	2019 மே 15

உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 20 ஆம் பிரிவிற்கு இணங்க வரிமதிப்பாண்டு என்பது மார்ச் மாதம் 31 ஆந் திகதியில் முடிவடையும் 12 மாத காலப் பகுதியைக் குறிக்கும்.

1.2 மதிப்பிடப்பட்ட செலுத்த வேண்டிய வருமானக் கூற்று - வழங்குதல் மற்றும் பொறுப்பேற்றல்

- **வழங்குதல்**

  மதிப்பிடப்பட்ட செலுத்த வேண்டிய வருமானக் கூற்றுக்களை (SET படிவம்) வருமான வரிக்காகப் பதிவுசெய்துள்ள ஒவ்வொரு ஆளுக்கும் அனுப்புவதற்கு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கு மேலதிகமாக, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தலைமையகத்தில் வரி செலுத்துநர் சேவைப் பிரிவில் அல்லது பிராந்திய அலுவலகங்களில் பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளவும் முடியும்.

- **பொறுப்பேற்றல்**

  உரியவாறு பூர்த்தி செய்யப்பட்ட (SET படிவம்) கூற்றுக்களை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தலைமையகத்தின் மத்திய ஆவண முகாமைப் பிரிவிற்கு (CDMU) அல்லது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஏதேனும் ஒரு பிராந்திய அலுவலகத்திற்கு வருகை தந்து ஒப்படைக்க முடியும் அல்லது

  மேலும் ஆணையாளர், மத்திய ஆவண முகாமைப் பிரிவு, உள்நாட்டு இறைவரித் திணைக்களம், சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பவும் முடியும்.

1.3 திருத்தங்களைச் சமர்ப்பித்தல் (பிரிவு 91 (5) (1))

எவரேனும் ஆளொருவரினால் சமர்ப்பிக்கப்படும் மதிப்பிடப்பட்ட செலுத்த வேண்டிய கூற்று குறித்த வருடம் முழுவதிலும் செல்லுபடியாகும் என்பதுடன் ஏதேனும் திருத்தங்கள் செய்ய வேண்டுமாயின் அவ்வாறு செய்வதற்கான ஏற்பாடுகள் உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் செய்யப்பட்டுள்ளன.

திருத்தப்பட்டவாறான கூற்றொன்றைச் சமர்ப்பிக்குமிடத்து வரித் தவணைகளை அதற்கு இணக்கமான முறையில் செலுத்துதல் வேண்டும். ஏதேனும் திருத்தப்பட்டவாறான கூற்றொன்றைச் சமர்ப்பிக்கும் போது படிவத்தில் காட்டப்பட்டுள்ளவாறு, கூற்றின் வகை என்பதற்கு முன்னால் ✓ அடையாளம் இடுதல் வேண்டும்.

(தயவு செய்து உரிய கூட்டினுள் '✓' இடுக)				
கூற்று வகை	: மூலக் கூற்று		மீளாய்வு மதிப்பீட்டுக் கூற்று	✓

1.4 வரியையும் தவணைக் கொடுப்பனவையும் கணிப்பதற்கான விசேட ஏற்பாடுகள் பிரிவு 203 (5)

2018/2019 வரிமதிப்பாண்டுக்காக மாத்திரம் மதிப்பிடப்பட்ட இலாபம் மற்றும் வருமானத்திற்காகச் செலுத்த வேண்டிய வருமான வரியையும் தவணைக் கொடுப்பனவுகளையும், கடந்த வரிமதிப்பாண்டுக்கான வரியுடன் 5 வீதத்தைச் சேர்ப்பதன் மூலம் கணக்கிடக் கூடிய விதத்தில் 203 (5) ஆம் பிரிவின் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

1.5 மதிப்பிடப்பட்ட செலுத்த வேண்டிய வருமானக் கூற்றைச் சமர்பிப்பதைத் தட்டிக்கழித்தல்/ தாமதமாக்குதல்

இக்கூற்றை உரிய தினத்தில் சமர்ப்பிக்காத ஆட்களின் மீது, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 178 ஆம் பிரிவின் கீழ் பின்வருமாறு தண்டம் விதிக்கப்பட முடியும்.

> செலுத்த வேண்டியுள்ள வரித் தொகையில் 5 வீதத்துடன் தாமதமாகும் ஒவ்வொரு மாதத்திற்காகவும் செலுத்த வேண்டியுள்ள வரித் தொகையின் 1 வீதம் அல்லது 50,000 ரூபா மற்றும் தாமதமாகும் ஒவ்வொரு மாத காலப் பகுதிக்கும் 10,000 ரூபா ஆகிய தண்டங்களில் அதிகமான தொகை தண்டமாக விதிக்கப்படும். (அதிகபட்ச தண்டம் 400,000 ரூபாவினால் மட்டுப்படுத்தப்படும்.)

1.6 தவணைக் கொடுப்பனவுகளைத் தட்டிக்கழித்தல்

இந்தத் தவணைக் கொடுப்பனவைத் தட்டிக்கழிக்கும் ஆட்களுக்கு எதிராக உள்நாட்டு இறைவரிச் சட்டத்திற்கு இணங்க பின்வரும் விதத்தில் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.

1. பிரிவு 179 (2) இன் கீழான ஏற்பாடுகள்

   தவணைக் கொடுப்பனவைச் செலுத்த வேண்டிய திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் இச்சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் தவணைக் கொடுப்பனவை அல்லது அதன் ஒரு பகுதியைச் செலுத்துவதற்குத் தவறும் எவரேனும் ஆளொருவர் மீது, செலுத்த வேண்டிய எனினும் செலுத்தியிராத வரிக் கொடுப்பனவில் 10% ஐ தண்டமாக விதிக்க முடியும்.

2. பிரிவு 159 (1) இன் கீழான ஏற்பாடுகள்

   ஏதேனும் செலுத்த வேண்டிய வரித் தவணையொன்றைத் தட்டிக் கழித்துள்ள சந்தர்ப்பங்களில் தவணைக் கொடுப்பனவு மீது அல்லது அதன் ஒரு பகுதி மீது 1 ½% வட்டி விதிக்கப்பட முடியும்.

1.7 தவணைக் கொடுப்பனவை பதிலீடு செய்தல்

கொடுப்பனவுகளைத் தாமதப்படுத்திய அல்லது கூற்றைச் சமர்ப்பிக்கத் தவறிய சந்தர்ப்பங்களில் வட்டி மற்றும் தண்டம் விதிக்கப்பட்டுள்ள நிலையில் அடுத்த தவணைப் பணம் செலுத்தப்படுமாயின், அந்த வட்டி மற்றும் தண்டம் என்பவற்றை அறவிட்டதன் பின்னரே உரிய தவணைக் கொடுப்பனவு செம்மையாக்கம் செய்யப்படும். (பிரிவு 154 (1))

1.8 கொடுப்பனவுகளைச் செலுத்த வேண்டிய முறை

- **கொடுப்பனவு நறுக்குகள்**

  நான்கு காலண்டுகளுக்குமான கொடுப்பனவு நறுக்குகள் திணைக்களத்தினால் வழங்கப்படும். அது தவிர கொடுப்பனவு நறுக்குகளை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தலைமையகத்திலுள்ள வரிசெலுத்தநர் சேவைப் பிரிவிலும் அனைத்து பிராந்திய அலுவலகங்களிலும், இலங்கை வங்கிக் கிளைகளிலும் பெற்றுக் கொள்ள முடியும்.

- **காலப் பகுதிகளுக்கான குறியீடுகள்**

  கொடுப்பனவுகளைச் செய்யும் போது காலப் பகுதிகள் தொடர்பில் கீழே காட்டப்பட்டுள்ளவாறு உரிய முறையில் குறியீடுகளைப் பயன்படுத்த வேண்டும்.

தவணை		காலப் பகுதிக் குறியீடு
முதலாம் தவணை	-	*18191*
இரண்டாம் தவணை	-	*18192*
மூன்றாம் தவணை	-	*18193*
நான்காம் தவணை	-	*18194*

- **கொடுப்பனவுகளைச் செலுத்த வேண்டிய வங்கி -** கொடுப்பனவுகளை **இலங்கை வங்கிக் கிளையின்** ஊடாகச் செய்ய வேண்டும்.

1.9 தனிப்பட்ட ஆட்களின் வருமான வரிக்கான கழிப்பனவுகள்

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க, உரிய தினத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் ஏதேனும் ஒரு சுய மதிப்பீட்டு வருமான வரியைச் செலுத்தும் ஆட்களுக்கு வழங்கப்பட்டு வந்த 10% கழிப்பனவு 2018/2019 வரி மதிப்பாண்டு முதல் செல்லுபடியாகாது.

நீங்கள் ஏற்கனவே 2018/2019 வரிமதிப்பாண்டுக்காக முதலாம் காலாண்டுக்குரிய வரித் தொகையைச் செலுத்தியிருந்தால், இந்த மதிப்பிடப்பட்ட வருமான கூற்றில் உள்ள மதிப்பிடப்பட்ட முதலாம் வரித் தவணைக் கொடுப்பனவிலிருந்து உரிய கழிப்பனவுகளைச் செய்ததன் பின்னர் செலுத்த வேண்டிய வரித் தவணைக் கொடுப்பனவைக் கணக்கிட்டுச் செலுத்த முடியும்.

2. மதிப்பிடப்பட்ட செலுத்த வேண்டிய வருமானக் கூற்றை பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்

முதலாம் கூற்றின் மேற்பகுதியில் இக்கூற்று அடிப்படைக் கூற்றா அல்லது திருத்தப்பட்டவாறான கூற்றா என்பதையும்; வரி வகை என்ன என்பதையும் ✓ அடையாளமிட்டு தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

(தயவு செய்து உரிய கூட்டினுள் '✓' இடுக)							
கூற்று வகை	:	**மூலக் கூற்று**	☐	**மீளாய்வு மதிப்பீட்டுக் கூற்று**	☐		
வருமான வரி வகை/	:	**கூட்டிணைவு வருமான வரி**	☐	**தனிநபர் வருமான வரி**	☐	**ஏனையவை**	☐

2.1 பகுதி I (மதிப்பிடப்பட்ட செலுத்த வேண்டிய வருமான வரிக் கூற்று - முன்னைய வருடத்தின் வரிப் பொறுப்பை அடிப்படையாகக் கொண்டு)

இக்கூற்றை வழங்கும் ஆளினால் செலுத்தப்பட வேண்டிய வரியையும் தவணைக் கொடுப்பனவுகளையும் கணிப்பதில் ஏதேனும் சிரமங்கள் இருப்பின், கடந்த வருடத்திற்கான வரியுடன் 5% ஐ சேர்ப்பதன் மூலம் செலுத்த வேண்டிய வரியையும் தவணைக் கொடுப்பனவையும் கணிக்க முடியும். [பிரிவு 203 (5)] ***இது 2019.03.31 ஆந் திகதி முடிவடையும் (2018/19) வரிமதிப்பாண்டுக்கு மாத்திரம் ஏற்புடையதாகும்.***

(முதலாம் பகுதியைப் பூர்த்தி செய்யும் ஆள் இரண்டாம் பகுதியைப் பூர்த்தி செய்யத் தேவையில்லை)

2.2 பகுதி II (மதிப்பிடப்பட்ட செலுத்த வேண்டிய வருமான வரிக் கூற்று - நடப்பு வருடத்தின் இலாபங்களையும் வருமானங்களையும் அடிப்படையாகக் கொண்டு)

1. *கூற்றின் அ, ஆ, இ, ஈ என்பவற்றின் கீழ் வருமான மூலங்களிலிருந்து எதிர்பார்க்கப்படும் மதிப்பிடப்பட்ட வருமானப் பெறுமதியைக் குறிப்பிடவும்.*
2. *அ, ஆ, இ, ஈ என்பவற்றின் கூட்டுத்தொகையை* **மொத்த மதிப்பிடப்பட்ட வரி வரிமதிப்புக்குள்ளாகும் வருமானம்** *என்பதன் கீழ் குறிப்பிடுதல் வேண்டும்.*

- ***கழிப்பனவுகள் பிரவு ⌉ 91 (2) (அ)***

  மொத்த மதிப்பிடப்பட்ட வரி விதியாகும் வருமானத்தைக கணிக்கும் போது சட்டத்தின 52 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு ஏற்ப உரிய கழிப்பனவுகளைச் செய்ய முடியும்.
  அக்கழிப்பனவுகளைச் செய்ததன் பின்னர் **மொத்த மதிப்பிடப்பட்ட வரி வரிவிதிப்புக்குள்ளாகும் வருமானம்** *கிடைக்கும்.*

- ***மதிப்பிடப்பட்ட மொத்த வரிப் பொறுப்பு 91 (4) ஆம் பிரிவு***

  மதிப்பிடப்பட்ட வரியைக் கணக்கிடும் போது சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க வெளிநாட்டு வரிகளை (செலுத்தியிருப்பின், அத்தொகையை (80 ஆம் பிரிவுக்கு இணங்க) கழிக்க முடியும்.

  அவ்வாறு கழித்ததன் பின்னர் கிடைக்கும் தொகை **மதிப்பிடப்பட்ட செலுத்த வேண்டிய வரியாகக்** *கருதப்பதல் வேண்டும்.* **அத்தொகையே, நான்கு தவணைகளில் செலுத்தப்பட வேண்டிய வரியாக அமையும்.**

2.3 பகுதி III (மதிப்பிடப்பட்ட செலுத்த வேண்டிய வரித் தொகை)

பகுதி I இன் Cஇன் கீழ் அல்லதுபகுதி IIஇன் J இன் கீழ் காட்டப்பட்டுள்ள மதிப்பிடப்பட்ட செலுத்த வேண்டிய வரித் தொகையில் ¼ ஒரு தவணையாக அமையும்.

3. வருமான வரித் தவணையைக் கணக்கிடுதல் பிரவு 90 (3)

தவணைப் பணத்தைச் செலுத்துவதற்கு முன்னர் ஏதேனும் ஒரு கொடுப்பனவைச் செய்திருந்தால், செலுத்த வேண்டிய மூன்று மாதத் தவணைப் பணத்தை, அக்கொடுப்பனைவக கவனத்தில் எடுத்து கணக்கிடுதல் வேண்டும். அதனால், செலுத்த வேண்டிய மூன்று மாத தவணைக் கொடுப்பனவொன்று, மதிப்பிடப்பட்ட செலுத்த வேண்டிய வருமான வரியில் ¼ பகுதியாக அமைய முடியாது.

செலுத்த வேண்டிய மூன்று மாதத் தவணைக் கொடுப்பனவை (செலுத்த வேண்டிய உண்மையான கொடுப்பனவு) பின்வரும் சமன்பாட்டின் மூலம் கணிப்பிட முடியும்.

$$\frac{A - C}{B}$$

A	-	மதிப்பிப்பட்ட வரி
B	-	அத்தவணை அடங்கலாக செலுத்த வேண்டிய மொத்தத் தவணகளின் எண்ணிக்கை
C	-	அத்தவணைக்கு முன்னரான கொடுப்பனவு (இதில் பிடித்து வைத்தல் வரியும் உள்ளடங்கும்)

மேற்குறித்த சமன்பாட்டில் இந்த தவணைக்கு முன்னரான கொடுப்பனவுகள் (C) என்பது பின்வரும் சந்தர்ப்பங்களைக் குறிக்கும்.

1. தவணைக்கு முன்னர் செலுத்திய ஏதேனும் வரித் தொகை - 90 (3) (அ) ஆம் பிரிவு
2. நிறுத்தி வைத்தல் வரி - 90 (3) (ஆ) ஆம் பிரிவு

பின்வரும் உதாரணங்கள் மூலம் தவணைக் கொடுப்பனவைக் கணிக்கும் முறை விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

உதாரணம் 01 - ஆரம்ப சந்தர்ப்பத்தில் முன்கொடுப்பனவு அல்லது நிறுத்தி வைத்தல் வரி இல்லாத சந்தர்ப்பம்

	I	II	III	IV
A	ரூபா 2,000,000	ரூபா. 2,000,000	ரூபா. 2,000,000	ரூபா. 2,000,000
B	4	3	2	1
C	0	500,000	1,000,000	1,500,000

I. முதலாம் தவணை $\frac{2,000,000 - 0}{4}$ 15.08.2018 செலுத்த வேண்டிய தவணைக் கொடுப்பனவு = ரூபா 500,000

II. இரண்டாம் தவணை $\frac{2,000,000 - 500,000}{3}$ 15.11.2018 செலுத்த வேண்டிய தவணைக் கொடுப்பனவு= ரூபா 500,000

III. மூன்றாம் தவணை $\frac{20,00,000 - 1,000,000}{2}$ 15.02.2019 செலுத்த வேண்டிய தவணைக் கொடுப்பனவு = ரூபா 500,000

IV. நான்காம் தவணை $\frac{2,000,000 - 15,00,000}{1}$ 15.05.2019 செலுத்த வேண்டிய தவணைக் கொடுப்பனவு = ரூபா 500,000

உதாரணம் 02 - முன்கொடுப்பனவொன்று காணப்படும் சந்தர்ப்பத்தில்

2018.07.15 ஆந் திகதி ரூபா 400,000 செலுத்தியுள்ளதாக எடுகோளாகக் கொள்ளப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில்,

	I	II	III	IV
A	ரூபா 2,000,000	ரூபா. 2,000,000	ரூபா. 2,000,000	ரூபா. 2,000,000
B	4	3	2	1
C	400,000	800,000	1,200,000	1,600,000

I. முதலாம் தவணை $\frac{2,000,000 - 400,000}{4}$ 15.08.2018 செலுத்த வேண்டிய தவணைக் கொடுப்பனவு= ரூபா 400,000

II. இரண்டாம் தவணை $\frac{2,000,000 - 8,00,000}{3}$ 15.11.2018 செலுத்த வேண்டிய தவணைக் கொடுப்பனவு = ரூபா 400,000

III. மூன்றாம் தவணை $\frac{2,000,000 - 1,200,000}{2}$ 15.02.2019 செலுத்த வேண்டிய தவணைக் கொடுப்பனவு = ரூபா 400,000

IV. நான்காம் தவணை $\frac{2,000,000 - 1,600,000}{1}$ 15.05.2019 செலுத்த வேண்டிய தவணைக் கொடுப்பனவு = ரூபா 400,000

உதாரணம் 03 - நிறுத்தி வைத்தல் வரி உள்ள சந்தர்ப்பங்களில் தவணைக் கொடுப்பனவைக் கணிக்கும் முறை

2018.07.15 நிறுத்தி வைத்தல் வரி - 200,000
2019.01.15 நிறுத்தி வைத்தல் வரி - 100,000

	I	II	III	IV
A	ரூபா 2,000,000	ரூபா. 2,000,000	ரூபா. 2,000,000	ரூபா. 2,000,000
B	4	3	2	1
C	200,000	650,000	1,200,000	1,600,000

I. முதலாம் தவணை $\frac{2,000,000- 200,000}{4}$ 15.08.2018 செலுத்த வேண்டிய தவணைக் கொடுப்பனவு = ரூபா 450,000

II. இரண்டாம் தவணை $\frac{2,000,000- 6,50,000}{3}$ 15.11.2018 செலுத்த வேண்டிய தவணைக் கொடுப்பனவு= ரூபா 450,000

III. மூன்றாம் தவணை $\frac{2,000,000 - 1,200,000}{2}$ 15.02.2019 செலுத்த வேண்டிய தவணைக் கொடுப்பனவு = ரூபா 400,000

IV. நான்காம் தவணை $\frac{2,000,000- 1,600,000}{1}$ 15.05.2019 செலுத்த வேண்டிய தவணைக் கொடுப்பனவு = ரூபா 400,000

உதாரணம் 04 - திருத்தமொன்றை வழங்குதல்

வரி செலுத்துநரினால் ஏதேனும் திருத்தங்கள் செய்யப்பட்ட வரி தொடர்பான கூற்றொன்று வழங்கப்படுமாயின், அக்காலண்டு முதல் சமன்பாட்டின் A இற்காக அந்த வரி பிரதியீடு செய்யப்பட வேண்டும். திருத்தத்தின் போது வரி குறையும் திருத்தங்களையும் வரி அதிகரிக்கும் திருத்தங்களையும் வழங்குவதற்கு முடியும்.

2018.08.01 - அடிப்படை மதிப்பீடு 2,000,000
2019.01.01 - திருத்தப்பட்டவாறான மதிப்பீடு 3,000,000

	I	II	III	IV
A	ரூபா 2,000,000	ரூபா. 2,000,000	ரூபா. 3,000,000	ரூபா. 3,000,000
B	4	3	2	1
C	0	500,000	1,000,000	2,000,000

I. முதலாம் தவணை $\frac{2,000,000- 0}{4}$ 15.08.2018 செலுத்த வேண்டிய தவணைக் கொடுப்பனவு = ரூபா 500,000

II. இரண்டாம் தவணை $\frac{2,000,000- 500,00}{3}$ 15.11.2018 செலுத்த வேண்டிய தவணைக் கொடுப்பனவு = ரூபா 500,000

III. மூன்றாம் தவணை $\frac{3,000,000 - 1,000,00}{2}$ 15.02.2019 செலுத்த தவணைக் கொடுப்பனவு = ரூபா 1,000,000

IV. நான்காம் தவணை $\frac{3,000,000– 2,000,00}{1}$ 15.05.2019 செலுத்த வேண்டிய தவணைக் கொடுப்பனவு = ரூபா 1,000,000

ஆணையாளர் நாயகத்தின் செய்தி

மேற்படி அறிவுறுத்தல்கள் உங்களின் வசதிக்காக வெளியிடப்படுவதுடன் உரிய முறையில் மதிப்பிடப்பட்ட வெளியீட்டைப் பூர்த்தி செய்து உரிய திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறும், உங்களால் கணக்கிடப்பட்ட வரியை உரிய தினத்தில் அல்லது அதற்கு முன்னர் செலுத்துமாறு வேண்டிக் கொள்கிறேன். இந்த அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதன் மூலம் எதிர்காலத்தில் உங்களுக்கு ஏற்படக் கூடிய சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

இலங்கையின் அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவதில் உரிய நேரத்தில் வரிகளைச் செலுத்துவதன் மூலம் நீங்கள் வழங்கும் ஒத்துழைப்பை, நான் தனிப்பட்ட முறையில் பாராட்டுவதுடன், நீங்கள் இந்த நாட்டின் கௌரவமான ஒரு பிரசை என்பதை இங்கு குறிப்பிடுவது எனது கடமையாகும்.

நன்றி,

ஐவன் திஸாநாயக
உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்

“வரிகள் ஒரு பொறுப்பன்று மாறாக ஒரு சமூகக் கடமையாகும்”